# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

**முறையீட்டு மனு எண்.045/2017/பே.2**
**ஆணை எண். 34/2018/நாள். 27–02–2018.**

**திரு கே. முருகன்,**
**எண். 13/3, 3–வது தெரு,**
**நெய்க்காரப் பட்டி,**
**திண்டுக்கல் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**நெய்க்காரப்பட்டி பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம். -- எதிர் மனுதாரர்**

**ஆணை**

திரு கே. முருகன், நெ. 13/3, 3வது வார்டு, நெய்க்காரப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம், முறையீட்டு மனுதாரது 10.03.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2017 அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனு எண். 045/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

முறையீட்டு மனுத்தாரர் திரு கே.முருகன், தனது முறையீட்டு மனுவில், தான் கடந்த 07.02.2011 அன்று நெய்க்காரப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி மேற்படி பேரூராட்சி நிர்வாகத்தின் அறிவிப்பின் பேரில் ரூ 100/– க்கான வரைவோலை எடுத்து முறையாக மனு செய்ததாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் நான்கு ஆண்டுகளை கடந்த நிலையிலும் தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்காததால் தான்சென்னை உயர்நிதிமன்ற மதுரைக் கிளையில் 27.02.2015ம் தேதி வழக்கு தொடுத்ததாகவும் (வழக்கு எண்.W.P.(MD) No.2697/2015) என தெரிவித்துள்ளார். மேற்படி

வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நகலினை இணைத்து 31.03.2015ம் தேதி மேற்படி பேரூராட்சிக்கு மனு செய்ததாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். இதற்கு பேரூராட்சி நிர்வாகம் அச்சமயம் நிலவி வரும் வறட்சியின் காரணமாக குடிநீர் குழாய் இணைப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது என பதிலளித்ததாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து 20.02.2016ல் அதிக மழை பெய்ததை தொடர்ந்து தான் மீண்டும் பேரூராட்சி நிர்வாகத்திற்கு மனு செய்ததாகவும் , நீதிமன்றம் உத்திரவிட்டும் தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்காமல், புதிதாக தொடங்கப்பட்ட தனியார் கிங் பார்க்கிற்கும், ஸ்ரீரேணுகாதேவி மேல்நிலை பள்ளிக்கும் முறைகேடாக பல லட்சம் கையூட்டு பெற்றுக் கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் தனது ஊரில் ஒரே வீட்டிற்கு இரண்டு இணைப்புகள் பெற்ற நபர்களும் பல பேர் உள்ளதாகவும் தெரிவித்து தனக்கு குடிநீர் குழாய் இணைப்பு முறையாக தாமதமில்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.03.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 389/2017/நாள் 27.12.2017ன் படி தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி பகுதியில் வசிக்கும் திரு கே.முருகன் என்பவர் முறைமன்ற நடுவத்திற்கு குடிநீர் இணைப்பு வேண்டி முறையீட்டு வழக்கு அளித்துள்ளர் எனவும் இதனைத் தொடர்ந்து மேற்காணும் நபர் குடிநீர் இணைப்பிற்கு செ.சீ.எண்,201/09.10.2017ன்படி முன் பணத் தொகையாக ரூ 5,000/- மற்றும் செ.சீ.எண். 215/11.10.2017 அன்று சென்டேஜ் கட்டணமாக ரூ 2,500/- ம் செலுத்தியுள்ளதாக தெரிவித்தும் மேற்படி பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கக் கோரி 14 நபர்கள் 2011 ஆம் ஆண்டு முன்வைப்புத் தொகை செலுத்தியுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் 14 நபர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கியபின்னர் மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்ற அறிக்கையினை பேரூராட்சி செயல் அலுவலர், நெய்க்காரப்பட்டி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 23.01.2018 ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின்கடித ந.க.எண். 389/2017/நாள் 27.12.2017ன் நகலினை மனுதாரருக்கு அனுப்பி மேற்படி அறிக்கையின் மீதான தனது ஆட்சேபணை/விளக்கம் ஏதேனும் இருப்பின் அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கக் கோரி ஆணையிடப்பட்டது. மேலும் தவறும்பட்சத்தில் கூறிக்கொள்ள முகாந்திரம் / ஆட்சேபணை ஏதுமில்லை எனக் கருதி இறுதி ஆணை பிறப்பிக்கப்படுமெனவும் மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் மேற்படி முறையீட்டு மனுதாரர் நாளது தேதிவரை நெய்க்காரப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கத்தின் மீது எவ்வித ஆட்சேபணை/விளக்கமும் தெரிவிக்கவில்லை மேலும் மனுதாரரது பிற புகார்கள் குறித்து எவ்வித ஆதாரங்களும் சமர்ப்பிக்கவில்லை. எனவே

மேற்படி பொருள் குறித்து முறையீட்டு மனுதாரர் கூறிக்கொள்ள முகாந்திரம் ஏதும் இல்லை எனக் கருதி மேற்படி முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

-//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்.**

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

1/3/18

பெறுநர்

1.திரு கே. முருகன்,
எண். 13/3, 3–வது தெரு,
நெய்க்காரப் பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
நெய்க்கரப்பட்டி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

**நகல்**

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம்.